# பிளாஸ்டிக் இல்லாத மாவட்டமாக மாற்றிட அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## அரசுத்துறை ஊழியர்களுக்கு வேண்டுகோள்



கலெக்டர் அலுவலகத்தில் நடந்த மாவட்ட சுற்றுச்சூழல் குழு கூட்டத்தில் அமைச்சர் பாலகிருஷ்ணாரெட்டி பேசினார். அருகில் கலெக்டர் பிரபாகர், ராஜேந்திரன் எம்எல்ஏ உள்ளனர்.

கிருஷ்ணகிரி, நவ.21: கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில், மாவட்ட அளவிலான சுற்றுச்சூழல் குழு கூட்டம் நடந்தது.

கலெக்டர் பிரபாகர் தலைமை வகித்தார். பர்கூர் தொகுதி எம்எல்ஏ ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் பாலகிருஷ்ணாரெட்டி பங்கேற்று ஆலோசனை மேற்கொண்டார். மாவட்டத்தில் சுற்றுச்சூழல் சம்பந்தமான பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பது குறித்து விவாதிக்கப்பட்டது. அரசின் உத்தரவின்படி 2019 ஜனவரி மாதம் 1ம் தேதி முதல் தமிழகத்தில் 7 வகையான பிளாஸ்டிக்குகள் பயன்பாட்டிற்கு தடை விதிக்கப்படுகிறது. அதை தவிர்க்க மாற்று பொருட்களை மக்கள் பயன்படுத்த வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகளும், அரசுத்துறை ஊழியர்களும் மேற்கொள்ள வேண்டும் என அமைச்சர் கூறினார்.

மேலும், அவர் பேசுகையில், தமிழக அரசு பிளாஸ்டிக் விரிப்புகள், பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் உறிஞ்சி குழல்கள், பிளாஸ்டிக் முலாம் பூசப்பட்ட டீ கப்புகள், டம்ளர்கள், பிளாஸ்டிக் தூக்கு பைகள், பிளாஸ்டிக் கொடிகள், பிளாஸ்டிக் தண்ணீர் பாக்கெட்டுகளுக்கு தடை விதித்துள்ளது. இதற்கு மாற்றாக பேப்பர் ரோல், வாழை இலை, பாக்கு மட்டைகள், அலுமினியம் பாயில், தாமரை இலை, கண்ணாடி, உலோக டம்ளர்கள், பேப்பர் ஸ்ட்ரா, துணி காகிதம், சணல் பைகள், காகித கொடிகள், சில்வர் குடுவைகள் போன்றவற்றை பயன்படுத்தலாம். கிருஷ்ணகிரி மாவட்ட மக்கள், வணிகர்கள், ஓட்டல், திருமண மண்டப உரிமையாளர்கள் அனைவரும் மேற்கண்ட தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தாமல், அதற்குரிய மாற்றுப் பொருட்களை பயன்படுத்தி, நமது பிளாஸ்டிக் இல்லா மாவட்டமாக மாற்றிட ஒத்துழைப்பு வழங்க வேண்டும், என்றார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலர் பழனிசாமி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சுசிலாராணி, வேளாண்மை துணை இயக்குநர் அகண்டராவ் மற்றும் பல்வேறு அரசு துறை சார்ந்த அலுவலர்கள், கல்லூரிகள் மற்றும் தொண்டு நிறுவனங்களை சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தினகரன் 21.11.18